8. அறிவிப்பு.

முதல் துணை நிதிநிலை அறிக்கை, 1993–94, வெட்டுத் மானங்கள் அளித்தல்.

பிற்பகல் 12-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1993–94 ஆம் ஆண்டுக்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கையில் கண்டுள்ள மானியக் கோரிக்கையின் மீது வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்க விரும்பும் உறுப்பினர்கள் பேரவையில் 190-வது விதிக் கிணங்க 28—10—1993 வியாழக்கிழமை மாலை 3 மணிக் குள் பேரவைச் செயலகத்தில் அவற்றைச் சேர்ப்பிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

9. மின்வாரியத்தின் நிதிநிலை அறிக்கை, 1993–94 மற்றும் திருத்திய மதிப்பீடுகள் 1992–93 மீது விவாதம்—(தொடர்ச்சி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின் மீது விவாதம்—தொடர்ச்சி. நேற்றைய தினமே நான் கேட்டிருந்தேன் இன்றைய தினம் நேரப்பற்றாக்குறை இருக்கும். ஆகவே நேற்றே மற்ற உறுப்பினர்கள் எல்லாம் பேசி முடிக்க வேண்டும் என்று வற்புறுத்தியிருந்தேன். இருந்தும் சிலர் இன்னும் பேச வேண்டி இருக்கிறது என்று வற்புறுத்திக் கொண்டிருக்கிற காரணத்தால் அனுமதிக்கிறேன். ஒவ்வொரு வருக்கும் ஐந்தைந்து நிமிடம். கடைசியில் எதிர்க்கட்சி சார்பில் விவாதத்தை முடித்து வைக்கிறவர்களுக்கு 10 நிமிடம். அதற்குள் முடித்துக்கொள்ள வேண்டும். குறுக்கீடுகளுக்கு ஏதேனும் ஆளானால் அந்தக் குறுக்கீடு உங்கள் கணக்கிலேதான் சேர்த்துக்கொள்ளப்படும் என் பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். திரு. வே. தம்பு சாமி.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைபெற்றுக் கொண்டிருக்கிற மின்வாரியம் சம் பந்தமான விவாதத்தில் கலந்து கொள்கிற வாய்ப்புக் கொடுத் தமைக்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாகக் கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை அறிவிப்பில் மின்சார வெட்டே கிடையாது என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால் தமிழகம் முழுவதும் கிராமங்களில் மின்சாரத் தட்டுப்பாடு ஏற்பட்டு வருகிறது. குறிப்பாக நாகை காயிதேமில்லத் மாவட்டத்தில் பகலாக இருந்தாலும் இரவாக இருந்தாலும் தொடர்ந்து மின்சாரத் தட்டுப்பாடு ஏற்படுகிறது. உதாரணத்